# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
# அவசரக் கூட்ட அறிவிப்பு

**12.07.2018–ம் தேதி வியாழக்கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,**
தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

**பொருட்கள்**

**குறள் :**

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

**087.)** நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–05 அவர்களின் செயல்முறை ஆணை எண்.**13277/2018/WS1** நாள்.**03.07.2018** கடிதத்தின்படி வந்தவாசி நகராட்சியில் **1591** எண்ணிக்கை புதிய குடிநீர் இணைப்புகளை (Intirnal Plumbing of Water Supply House Service Connection) தெருவில் உள்ள பகிர்மானக் குழாயிலிருந்து வீடு வரை குழாய் பதிந்து தர மதிப்பீடு ரூ.**90.00** இலட்சத்திற்கு TUFIDCO நிறுவனம் மூலம் வட்டியில்லா கடனாக பெற்று பணிமேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். **080 /2018/**இ**1**, நாள்.**11.05.18**) **(பதிவு செய்யப்பட்டது)**

**088.** வந்தவாசி நகராட்சியில் புதிய பேருந்து நிலையம், பொதுமக்கள் பயன்படுத்தும் ஆண்கள் மற்றும் பெண்கள் கழிவறையின் நச்சுத்தொட்டி நிரம்பி கழிவுகள் கழிவறை பேசின்கள் வழியாக வெளியில் வருவதால் கழிவறைகளை பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் துர்நாற்றம் மற்றும் நோய் கிருமிகள் பரவும் அபாயம் உள்ளதால் ஆணையாளர் அவர்கள் மற்றும் பொறியாளர் அவர்கள் அறிவுரைப்படி நச்சுத்தொட்டிசுத்தம் செய்தால்தான் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும் என கூறியதின் பேரில் அதனை ஆய்வு செய்தததில் மேற்கண்ட நச்சுத்தொட்டியை சுத்தம் செய்ய நகராட்சியில் வாகனம் ஏதும் இல்லாத காரணத்தால் தனியார் நச்சுத்தொட்டி சுத்தம் செய்யும், வாகனம் மூலம் சுத்தம் செய்து தரவும், அதற்காகும் தோராய செலவு ரூ.**25000/–**க்கும் மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். **0853 /2018/**எச்**1**, நாள்.**01.06.18**) **(அனுமதிக்கப்பட்டது)**

**089.**வந்தவாசி நகராட்சி **18**வது வார்டில் உள்ள நகராட்சி பொதுகழிப்பிடத்தை தினந்தோறும் துலக்கி, கழுவி, சுத்தம் செய்து பொது சுகாதாரம் பேணி பராமரித்து வருதல் பணிக்கு நாள் **1**க்கு ஆகும் செலவு குறித்து விலைப்புள்ளிகள் கோரியதில் **13.10.2017**ல் வரப்பெற்ற **3** விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

விவரம்

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் விவரம் | விலைப்புள்ளி நாள்–1க்கு ஆகும் செலவு |
|---|---|---|
| 1 | திரு.W.பஷீர், ஒப்பந்ததாரர் | ரூ.225.00 |
| 2 | திரு.E.மஜீத், ஒப்பந்ததாரர் | ரூ.200.00 |
| 3 | திரு.அ.அஜீஸ், ஒப்பந்ததாரர் | ரூ.175.00 |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள 3 விலைப்புள்ளிகளில் நாள் 1க்கான பராமரிப்பு பணி செலவு ரூ.175/–என குறைவான தொகைக்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.அ.அஜீஸ், ஒப்பந்ததாரர் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
3. பொது சுகாதார அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று திரு.அ.அஜீஸ், ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கவும், பராமரிப்பு பணி அக்டோபர்–2017 மாதம் முதல் ஜீன்–2018 மாதம் வரை பராமரிக்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.60,000/–க்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.0056/2017/எச்1, நாள்.13.10.2017) **(அனுமதிக்கப்பட்டது)**

090. வந்தவாசி நகராட்சியில் ஆணையாளர், பொறியாளர் மற்றும் காசாளர் உபயோகத்திற்கு தேவையான செல்போன்கள் சப்ளைக்கு 11.10.2017ல் விலைப்புள்ளி கோரியதில் 13.10.2017ல் வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

விவரம்

| வ.எண். | விலைப்புள்ளி நிறுவனம் விவரம் | விலைப்புள்ளி செல்போன்–1க்கு ஆகும் செலவு |
|---|---|---|
| 1 | கே.ஜே.செல்சென்டர், சீதாராமநாயுடுதெரு, வந்தவாசி. | ரூ.13,999.00 |
| 2 | சன்மொபைல், பஜார்வீதி, வந்தவாசி | ரூ.14,999.00 |
| 3 | தீபம் மொபைல், ஒத்தவாடை செட்டித்தெரு, வந்தவாசி. | ரூ.14,500.00 |

அலுவலக குறிப்பு–

1.வரப்பெற்றுள்ள 3 விலைப்புள்ளிகளில் ஒரு செல்போன் விலை ரூ.13,999/– என குறைவான தொகைக்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள கே.ஜே.செல்சென்டர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
2.செல்போன் உபயோகம் அவசரம் கருதியும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அறிவுரைகளுக்கிணங்கவும் கே.ஜே. செல் சென்டரில் இருந்து 3 செல்போன்கள் சப்ளைக்கு நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கியதையும் , செலவுத்தொகை ரூ.27,998/–தொகை வழங்கவும், நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 057 /2017/இ1, நாள்.13.10.2017) **(அனுமதிக்கப்பட்டது)**

091. இந்நகராட்சியின் ஆண்டு கணக்குகள் 2016–2017ம் ஆண்டின் கணக்குகளை முடித்து தணிக்கைக்கு உட்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் உதவி இயக்குநர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அவர்களின் அறிவுத்ததலின்படி வெளி ஆட்களின் மூலம் ஆண்டு கணக்கு தயார் செய்ய தோராய செலவினமாக ரூ.60,000/– (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) இந்நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2018/பி1, நாள்.31.01.2018) **(அனுமதிக்கப்பட்டது)**

092. இந்நகராட்சியில் தற்போது காஞ்சிபுரம் சாலை வடக்கு காவல் நிலையம் அருகில் உள்ள திரு.சனாவுல்லாகான் த/பெ.நவாப்கான், நெ.26 எப், காஞ்சிபுரம் சாலையில் உள்ள கட்டிடத்தில் இயங்கி வரும் நகர்ப்புற சுகாதாரமையம் மருத்துவமனைக்கு மாதவாடகை ரூ.6000/— மற்றும் மின்சார கட்டணம் ரூ.1000/—க்கு நகர்மன்றம் தனது தீர்மான எண்.76, நாள்.31.05.2013ன்படி அனுமதி வழங்கியுள்ளது. அதனடிப்படையில் தற்போது மாதவாடகை ரூ.6000/— மின்கட்டணம் ரூ.1000/— ஆக மாதம் ரூ.7000/— வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ஏப்ரல்—2018 முதல் மார்ச் 2019 வரை தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. ஏப்ரல்—2018 முதல் மார்ச் —2019 வரை மாத வாடகை மற்றும் மின்கட்டணம் தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 459 /2017/இ1, நாள்.16.07.18) **(அனுமதிக்கப்பட்டது)**

093. வந்தவாசி நகராட்சி துாய்மை பாரத திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016—2017ல் ரூ.142.00 இலட்சம் மதிப்பீட்டில் 3 இடங்களில் நுண்ணிய உரம் ஆலை (Decentralized Micro Compost Centre) அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் செயல்முறை ந.க.எண்.29014/2016/பி3, நாள்.11.12.2017ல் திருத்திய நிர்வாக அங்கீகாரம் பெறப்பட்டது.

| விவரம் | மதிப்பீடு |
|---|---|
| 1. பேருந்து நிலையம் அருகில் கிழக்குப்புறம் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | ரூ.50.00 இலட்சம் |
| 2.பேருந்து நிலையம் அருகில் மேற்குப்புறம் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | ரூ.45.00 இலட்சம் |
| 3.பூங்காநகர் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | ரூ.47.00 இலட்சம் |
| மொத்தம் | ரூ.142.00 இலட்சம் |

மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 18.01.2018ல் பெறப்பட்ட 3 ஒப்பந்தப்புள்ளிகள் விவரம்

பணியின் விவரம் — ஒப்பந்ததாரர்கள் விவரம்

| வ.எண். | பணியின் விவரம் | திரு.S.தர்மதுரை | திரு.P.இளங்கோவன் |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் அருகில் கிழக்குப்புறம் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | 4—88% மதிப்பீட்டை விட அதிகம் | 5—05% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | பேருந்து நிலையம் அருகில் மேற்குப்புறம் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | 4—87% மதிப்பீட்டை விட அதிகம் | 7—61% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | பூங்காநகர் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | 4—88% மதிப்பீட்டை விட அதிகம் | 5—83% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.P.இளங்கோவன் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை விட குறைவாகவும், மதிப்பீட்டைவிட 1.4.88% , 2.4.87%, 3.4.88% கூடுதலாகவும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.S.தர்மதுரை, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதியின் பேரில் பணி உத்திரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் அந்தந்த பகுதிமக்கள் நுண்ணிய உரம் ஆணை அமைக்க எதிர்ப்பு தெரிவித்ததன்பேரில் மாவட்ட ஆட்சியர் அவர்கள், மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் வேலூார், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஆய்வு மற்றும் அறிவுரையின் பேரில்

மேற்கண்ட பணிகள் செய்ய தேர்வு செய்த இடங்களுக்குப் பதிலாக கீழ்வரும் இடங்களில் பணிசெய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டுத்தொகை |
|---|---|---|
| 1 | 19வது வார்டு சுடுகாடு பகுதி | ரூ.50.00 இலட்சம் |
| 2 | 4வது வார்டு நகராட்சி நவீன ஆடு அறுக்கும் தொட்டி அருகில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் | ரூ.47.00 இலட்சம் |
| 3 | வந்தவாசி A ஏரியின் கீழ் அமைந்துள்ள மயான பகுதி | ரூ.45.00 இலட்சம் |

மேற்கண்ட இடங்களில் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி மாறுதல் இன்றி ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட விலைவிகிதம் மாறுதல் இன்றியும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.S.தர்மதுரை அவர்கள் மூலம் பணி செய்து முடிக்கவும், மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.பொது சுகாதாரம் கருதியும், அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று துாய்மை பாரதம் பணி அவசியம் கருதி திரு.S.தர்மதுரை ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.194/2016/எச்1, நாள்.13.07.2018) **(அனுமதிக்கப்பட்டது)**

**094.** வந்தவாசி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN25AW3066 வாகனத்தை FC புதுப்பித்து சரிசெய்த வழங்கிய வகையில் சக்திபாடி ஒர்க்ஸ்,–ன் பட்டியல் தொகை ரூ.1,89,200/– வரப்பெற்றுள்ளது. எனவே TN25AW3066 FC செய்து கொடுத்த வகையில் ரூ.1,89,200/–ஐ சக்திபாடி ஒர்க்ஸ்–க்கு, வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.பொது சுகாதாரம் வாகனம் TN25AW3066-FC செலவு செய்த வகையில் தொகை ரூ.1,89,200/– வழங்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.597/2018/எச்1, நாள்.11.07.2018) **(அனுமதிக்கப்பட்டது)**

**095.** வந்தவாசி நகராட்சி பகுதியில் தற்பொழுது பருவமழை தொடங்கப்பட்ட நிலையில் டெங்கு மற்றும் மர்மகாய்ச்சல் நிகழ்வு காணப்படுவதால் வந்தவாசி நகர் பகுதியில் உள்ள 24 வார்டுகளிலும் வீடு வீடாக கொசு புழு ஒழிப்பு பணிக்கு புகை மருந்து வீட்டின் உட்புறம் மற்றும் வெளிபுறம் பணி செய்திட நோய் பரப்பும் ஆதாரங்களை வேருடன் அழித்தல் டெங்கு நோய் உள்ளிட்ட தொற்று நோய்கள் பெருந்தாக்க அளவில் தோன்றாத வண்ணம் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள மஸ்துார்களை தற்காலிகமாக 30 எண்ணிக்கையில் ந.க.எண்.2833/இ4/2013, நாள்.05.07.18ன்படி உத்தேசமாக நியமிக்க வேண்டிய டெங்கு நோய்த்தடுப்பு பணியாளர்கள் 35 எண்ணிக்கையில் மக்கள் தொகை எண்ணிக்கை அடிப்படையில் நியமிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

வந்தவாசி நகராட்சியின் நிதி நிலையை கருத்தில் கொண்டு 30 நபர்களை டெங்கு நோய் தடுப்பு தற்காலிக பணிக்கு பணி அமர்த்திக்கொள்ளவும், தனியர்களை 02.07.2018 முதல் 31.12.2018 வரை ஆறு மாதங்களுக்கு பணி அமர்த்திடவும், அதற்கு உண்டான செலவு செய்யாறு சுகாதார மாவட்ட துணை இயக்குநர் கடிதம் ந.க.எண்.2833/இ4/2013, நாள்.21.07.2016–ன்படி ரூ.200/–வீதம் ஒரு நாளைக்கு ஒரு பணியாளர்க்கு வழங்க கடிதம் வரப்பெற்றுள்ளது. இதன்படி ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலக குறிப்பு–

1.மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1530/2017/எச்1, நாள்.24.07.2018) **(பதிவு செய்யப்பட்டது)**

**096.** வேலுார் மண்டலத்தில் உள்ள **வந்தவாசி** நகராட்சியில் வசிக்கும் **31317** பொதுமக்களுக்கு நகராட்சியில் நாள்தோறும் 19.60 இலட்சம் குடிநீர் **ஒரு நாள் விட்டு ஒரு** தினங்களுக்கு ஒருமுறை வீதம், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு **90 லிட்டர்** வீதம் தண்ணீர் கீழ்க்கண்ட நீராதாரங்களின் அடிப்படையில் பெறப்பட்டு வழங்கப்படுவதன் விவரம் வருமாறு:

| வ.எண் | நீராதார இருப்பிடம் | மேல்நிலைத் தொட்டி அமைவிடம் | மேல்நிலைத் தொட்டி கொள்ளவு | குடிநீர் விநியோகிக்கப்படும் தண்ணீர் மற்றும் கால அளவு |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **1** | அனக்காவூர் தலைமை நீரேற்று நிலையம் செய்யாறு | அச்சரப்பாக்கம் ரோடு | **10.00 இலட்சம்** | **3.10 MLD and 2 housr** |
| | சுகநதி கிணறு | பழைய காஞ்சிபுரம் ரோடு அம்மா உணவகம் அருகில் | **5.00 இலட்சம்** | **3.10 MLD and 2 housr** |
| | | நகராட்சி அலுவலக டேங் | **3.60 இலட்சம்** | **3.10 MLD and 2 housr** |
| | | 19 வது வார்டு திண்டிவனம் ரோடு | **1.00 இலட்சம்** | **3.10 MLD and 2 housr** |

மேலும் **வந்தவாசி** நகராட்சியில் மொத்தமுள்ள **31317** பொதுமக்களுக்கு 3.10 MLD மொத்தம் வழங்கப்படும் தண்ணீரின் அளவு சொத்து வரிவிதிப்புதாரர்களில் **7900** எண்கள் குடியிருப்புகளுக்கும் **6046** எண்கள் **1854** வணிக உபயோகத்திற்கு வீட்டிணைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர் விநியோகத்தினை Flow Control Valve மற்றும் Metering System-த்தின் அடிப்படையில் நகராட்சி மூலம் Uniform Water Supply Distribution செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள **4467** எண்கள் சொத்துவரி குடியிருப்புகளுக்கும், **108** வணிக உபயோக கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்புகள் **1591** எண்கள் வழங்கும் பணிக்கு டுபிட்கோ மூலம் வட்டியில்லா கடனாக **ரூ.90 இலட்சம்** பணியினை மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையர்,சென்னை –5 அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் ந.க. எண். 13277/2017/WS1, நாள்.03.07.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் கடித ந.க. எண். 13277/2017/குவ1, நாள்: 09.07.2018 தேதிய கடிதத்தில் 29.06.2018 ஆம் தேதியில் நடைபெற்ற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் பொதுமக்களுக்கு 24 x 7 அடிப்படையில் சீரான குடிநீர் விநியோகம் உரிய அழுத்தத்தில் கடைமடைப்பகுதியில் உள்ளவர்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யவும், இதற்கான நீராதாரங்கள் சரியான முறையில் District Metering Area (D M A) –ன்படி வழக்கத்தினை வந்தவாசி நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

ஏற்கனவே, TWIC கலந்தாலோசகர் மூலம் மாதிரிதிட்ட அறிக்கையுடன் தற்போதுள்ள நடைமுறையினை மாற்றி அமைத்து District Metering Area தனியார் கலந்தாலோசகரை உரிய வழிக்காட்டுதலின் படி நியமித்து TNUIFSL நிதி நிறுவன Project Development Grant Fund (PDGF ) or Project Preparatory Fund (PPF) மூலம் Zonation activities மூலம் பணிகளை மேற்கண்ட நிதியின் கீழ் **வந்தவாசி** நகராட்சியில் மேற்கொள்ள நகரமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம். **(அனுமதிக்கப்பட்டது)**

**097.** வந்தவாசி நகராட்சி பகுதி வார்டு **–18**ல் பெரியமாரியம்மன் கோயிலில் வருடாவருடம் திருவிழா விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வருடம் **17.06.2018** முதல் **19.06.2018** வரை கொண்டாடப்படவிருக்கிறது. நகராட்சி சார்பில் வருடாவருடம் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம் கோயில் தெரு மற்றும் சுற்றுப்பாதை மிகவும் சிதிலமடைந்து விட்டதால் பொதுமக்கள் பாதையை சீர்செய்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார்கள், திருவிழாவையொட்டி, பாதையை சீரமைத்து கொடுக்கவும், மேலும் அவசர, அவசிய காரணங்களால் நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15**–ன் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அனுமதியுடன் பணிமேற்கொள்ளப்பட்டது. மொத்த செலவினத்தொகை ரூ.**2,69,672/–** மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 123/2018/இ1, நாள்.16.06.2018)** **(பதிவு செய்யப்பட்டது)**

**098.** வந்தவாசி நகராட்சி பகுதியில் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் HDPE Tank வைத்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சி பகுதியில் பொதுமக்கள் அவசர அவசியம் கருதியும், லாரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சி குடிநீர் Tanker பழுதடைந்துவிட்டதால், வாடகை Tanker தனியார் மூலம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. **01.06.2018** முதல் **30.06.2018** வரை தனியார் குடிநீர் Tanker மூலம் குடிநீர் விநியோகம் செய்த வகையில் செலவினம் ரூ.**72,800/–** (எழுபத்திரெண்டாயிரத்து எண்ணூறு மட்டும்) மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.124/2018/இ1, நாள்.16.07.2018)** **(பதிவு செய்யப்பட்டது)**

**099.**வந்தவாசி நகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் பயன்படுத்தும் குப்பை வாகனம் TN25AW3043 என கொண்ட வாகனம் **15.03.2016**உடன் FC தேதி முடிவடைந்து விட்டதால் இதுவரை FC செய்யப்படாமல் உள்ளது. எனவே உடன் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாகனத்தை FC செய்ய விலைப்புள்ளி பெற்று அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | வாகனத்தைFCசெய்யஉண்டாகும்செலவினம் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | சக்தி பாடி ஒர்க்ஸ், பூந்தமல்லி சென்னை | 1,74,200.00 |
| 2 | ஏ ஆர்வி பாடி பில்டர்ஸ் | 1,78,000.00 |
| 3 | ஜெயசக்தி பாடி ஒர்க்ஸ், | 1,76,500.00 |

**அலுவலககுறிப்பு–**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி பொது சுகாதாரம் அவசியம் கருதி உடன்பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தொகை வழங்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**(ந.க.எண்.0126/2018, நாள்.15.02.2018)** **(அனுமதிக்கப்பட்டது)**

**100.**வந்தவாசி நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமாக குத்தகை இனங்கள் மூன்று ஆண்டுகளுக்கு **(2018–2019** முதல் **2020–2021)** குத்தகை விளம்பர அறிவிப்பினை செய்திதாளில் விளம்பரம் செய்துகொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**<u>குத்தனை இனங்கள் விபரம்</u>**

| வ.எண். | குத்தகை இனம் | வருடம் |
|---|---|---|
| 1 | வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பறைகள் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 2018-19 to 2020 2021 |
| 2 | வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பறைக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை | 2018-19 to 2020 2021 |
| 3 | வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் ஒரு எடை பார்க்கும் கருவி அமைத்துக் கொள்ளும் உரிமை | 2018-19 to 2020 2021 |
| 4 | வந்தவாசி நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட காஞ்சிபுரம் ரோட்டில் உள்ள நவீன ஆடு அறுக்கும் தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2018-19 to 2020 2021 |
| 5 | வந்தவாசி நகராட்சி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை. | 2018-19 to 2020 2021 |
| 6 | வந்தவாசி நகராட்சி பகுதிகளில் உள்ள பலன் தரும் மரங்களின் பலனை அனுபவிக்கும் உரிமை | 2018-19 to 2020 2021 |
| 7 | அனக்காவூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பலன் தரும் மரங்களின் பலனை அனுபவிக்கும் உரிமை. | 2018-19 to 2020 2021 |

**அலுவலககுறிப்பு–**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. குத்தகை இனங்கள் செய்தித்தாளில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.**12020/–** வழங்கியதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**(ந.க.எண்.127/2018/அ1, நாள்.22.02.2018)** **(அனுமதிக்கப்பட்டது)**

**101.** வந்தவாசி நகராட்சி துாய்மை பாரத திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டம் **2016–2017**ல் ரூ.**142.00** இலட்சம் மதிப்பீட்டில் **3** இடங்களில் நுண்ணிய உரம் ஆலை (Decentralized Micro Compost Centre) அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் செயல்முறை ந.க.எண்.**29014/2016**/பி3, நாள்.**11.12.2017**ல் திருத்திய நிர்வாக அங்கீகாரம் பெறப்பட்டது.

| விவரம் | மதிப்பீடு |
|---|---|
| 1. பேருந்து நிலையம் அருகில் கிழக்குப்புறம் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | ரூ.**50.00** இலட்சம் |
| 2.பேருந்து நிலையம் அருகில் மேற்குப்புறம் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | ரூ.**45.00** இலட்சம் |
| 3.பூங்காநகர் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | ரூ.**47.00** இலட்சம் |
| மொத்தம் | ரூ.**142.00** இலட்சம் |

மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு **18.01.2018**ல் பெறப்பட்ட **3** ஒப்பந்தப்புள்ளிகள் விவரம்

பணியின் விவரம் – ஒப்பந்ததாரர்கள் விவரம்

| வ.எண். | பணியின் விவரம் | திரு.S.தர்மதுரை | திரு.P.இளங்கோவன் |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் அருகில் கிழக்குப்புறம் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | 4.88% மதிப்பீட்டை விட அதிகம் | 5.05% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | பேருந்து நிலையம் அருகில் மேற்குப்புறம் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | 4.87% மதிப்பீட்டை விட அதிகம் | 7.61% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | பூங்காநகர் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை அமைத்தல் | 4.88% மதிப்பீட்டை விட அதிகம் | 5.83% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.S.தர்மதுரை, ஒப்பந்ததாரர், மதிப்பீட்டைவிட, குறைவாகவும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே, திரு.S.தர்மதுரை, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு தனி அலுவலர் அவர்களால் பணி உத்திரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் அந்தந்த பகுதிமக்கள் நுண்ணிய உரம் ஆலை அமைக்க எதிர்ப்பு தெரிவித்ததன்பேரில் மாவட்ட ஆட்சியர் அவர்கள், மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் வேலூர், அவர்கள் சட்டமன்ற உறுப்பினர், வந்தவாசி அவர்கள் ஆய்வு மற்றும் அறிவுரையின் பேரில் மேற்கண்ட பணிகள் செய்ய தேர்வு செய்த இடங்களுக்குப் பதிலாக கீழ்வரும் இடங்களில் பணிசெய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | | மதிப்பீட்டுத்தொகை |
|---|---|---|---|
| 1 | ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட இடம் – | தேர்வு செய்யப்பட்ட மாற்று இடம். | ரூ.47.00 இலட்சம் |
| | பூங்காநகர் பகுதியில் நுண்ணிய உரம் ஆலை | 19வதுவார்டு சுடுகாடு பகுதி | |

மேற்கண்ட இடங்களில் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி மாறுதல் இன்றி ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட விலைவிகிதம் மாறுதல் இன்றியும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.S.தர்மதுரை அவர்கள் மூலம் பணி செய்து முடிக்கவும், மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.பொது சுகாதாரம் கருதியும், அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று துாய்மை பாரதம் பணி அவசியம் கருதி திரு.S.தர்மதுரை ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.194/2016/எச்1, நாள்.13.07.2018) **(அனுமதிக்கப்பட்டது)**

**102.** வந்தவாசி நகராட்சியில் அலுவலுக பயன்பாட்டில் இயங்கிவரும் ஜீப்வாகனம் எண்.TN25 AT 4738–ன் பேட்டரி பழுதடைந்துள்ளதால் அவசரம் அவசியம் கருதி விலைப்புள்ளிகள் பெற்று புதியதாக வாங்கி கொள்ள மன்ற அனுமதிக்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கப்படுகிறது.
2. அவசரம் அவசியம் கருதி பேட்டரி ரூ.7500/– செலவுகள் மேற்கொண்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

(ந.க.எண்.920/2018/இ1, நாள்.18.06.2018) **(அனுமதிக்கப்பட்டது)**

**103.** வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் அலுவலக பயன்பாட்டில் உள்ள எஸ்.டைப் சேர்கள் பழுது அடைந்துள்ளதால் அதனை நிர்வாக நலன் கருதி விலைப்புள்ளி பெற்று பழுது நீக்கம் செய்து கொள்ள மன்ற அனுமதி எதிர் நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று சீர் செய்து கொள்ள மன்ற பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**எஸ்.டைப் சேர் பழுது பார்க்க சேர் ஒன்றுக்கு விலைப்புள்ளி விவரம்**

| | | |
|---|---|---|
| நூார் பர்னீச்சர்ஸ் ஒர்க்கஸ்,<br>ஆரணி ரோடு, வந்தவாசி. | ஸ்ரீதர் பர்னீச்சர்ஸ் ஒர்க்கஸ்,<br>மார்க்கெட், வந்தவாசி. | உமா டிம்பர்ஸ்<br>வந்தவாசி. |
| **ரூ.11300/–** | **ரூ.11690/–** | **ரூ.12100/–** |

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நூார் பர்னீச்சர்ஸ் ஒர்க்கஸ், வந்தவாசி பழுது நீக்கம் செய்ய உத்திரவு வழங்க மன்ற அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி சேர்கள் பழுது நீக்கம் செய்ததற்கு தொகை ரூ.11300/– செலவுகள் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.'084/2018/இ1, நாள்.02.05.2018) **(அனுமதிக்கப்பட்டது)**

**104.** திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை கோடைவிழா நடைபெறும், கோடைவிழா **2018–** வெகு சிறப்பாக நடைபெற உள்ளதால் வந்தவாசி நகராட்சியின் சார்பாக விளம்பரம் செய்ய விலைப்புள்ளி பெற்று பேனர் செய்து கொள்வதற்கும், அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.
2. அவசரம் அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று 10 (பத்து) பேனர் செய்ததற்கு ஆன தொகை ரூ.20,000/– வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது.

(ந.க.எண்.'910/2018/இ1, நாள்.14.06.2018) **(அனுமதிக்கப்பட்டது)**

தனி அலுவலர்
மற்றும் ஆணையாளர்
வந்தவாசி நகராட்சி.